# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம்

# TAMOULCHOLAI ASSOCIATION

## விழிப்புணர்வுடன் செயற்படுவோம்.

கோவிட்-19 பேரிடராக உலகை அச்சுறுத்தும் சூழ்நிலையின் தாக்கத்தையும் அதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளையும் கருத்திற்கொண்டு அனைவரும் அவதானமாகவும் நிதானமாகவும் செயற்படவேண்டிய காலகட்டமிது. இந்த நோயின் தாக்கம் பிரான்சு மண்ணில் பலத்த அவலங்களை ஏற்படுத்திவருகின்றது. இதிலிருந்து மீள்வதற்கு, பிரான்சு அரசால் அறிவிக்கப்படும் சுகாதார நடைமுறைகளையும் விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் அனைவரும் ஒன்றிணைந்து பின்பற்றுதல் அவசியமானது. இது ஒரு சமூகப்பொறுப்புமாகும். இந்நோய்ப் பரவல் தடுப்பு முறையில் நாம் ஒவ்வொருவரும் காட்டும் சிறு அலட்சியமும் சமூகத்தில் பெரு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நிலைமையின் தீவிரத்தையுணர்ந்து, எம்மை நாமே தற்காத்துக்கொள்ளும் வகையில் பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு அனைத்துத் தமிழ்ச்சங்கங்களினதும் உறுப்பினர்கள், தமிழ்ச்சோலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட அனைத்துத் தமிழ் மக்களையும் அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம். பொது முடக்கத்தால் மனந்தளர்ந்திடாது உடல், உள ஆரோக்கியத்தில் அக்கறைசெலுத்தி இந்தப்பேரிடரில் இருந்து எமைக் காத்துக்கொள்வோம்.

அன்பான உறவுகளே! நெருக்கடிகள் எம்மினத்திற்குப் புதியவையல்ல. எதிரியின் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல்களுக்கு மத்தியிலும் கல்விக்கூடங்களில் பதுங்கு குழி அமைத்து, கல்வியைத் தொடர்ந்து சாதனைகள் பல படைத்தது எம்மினம். இந்தப் பேரிடரில் இருந்தும் நாம் மீண்டெழுவோம்; அரசின் பொதுமுடக்கச் சட்டத்தை மதித்து வீட்டில் இருக்கும் வேளையிலும் திட்டமிட்டு நேரத்தைப் பயன்படுத்தி எம் சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்காய் உழைப்போம்; இக்கட்டான சூழ்நிலையிலும் சிந்தித்துச் செயலாற்றி எம்மிருப்பையும் உயிர்ப்பையும் நிலைநிறுத்துவோம்.

க.ஜெயகுமாரன்

**க. ஜெயகுமாரன்**

பொறுப்பாளர்

03-11-2020 தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

**165 bd de la Villette, 75010 Paris. Tél :09 84 06 38 83 / email : tamoulcholai@yahoo.fr site : www.tamoulcholai.fr**

-La loi du 1 juillet 1901 n° W751141889

**"நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம் " - "Notre langue maternelle est la racine de notre bien être"**